தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மார்கழி 15, ஸ்ரீமுக—திருவள்ளுவர் ஆண்டு 2024.

1993, டிசம்பர் 30, வியாழக்கிழமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 10.00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

ஒல்லும்வா யெல்லாம வினைநன்றே ஒல்லாக்கால்

செல்லும்வாய் நோக்கிச் செயல்''

இயலும் வழிகளில் எல்லாம் வினையைச் செய்து முடித்தல் நல்லது. இயலாத இடங்களில் செய்து முடிக்கக் கூடிய வழி வகையைக் கண்டு கருதிய வினையைச் செய்திட வேண்டும்.

1. இரங்கல் குறிப்பு.

முன்னாள் உறுப்பினர் மறைவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் நியமன உறுப்பினரான திருமதி ஆல்டா மிலிசென்ட் பௌலர் அவர்கள் 24—11—1993–ஆம் நாள் அன்று மறைந்தமை குறித்து இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். திருமதி ஆல்டா மிலிசென்ட் பௌலர் அவர்கள் 1971 ஆம் ஆண்டு முதல் 1976 ஆம் ஆண்டு வரை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் உறுப்பினராக நியமனம் செய்யப்பட்டு சிரிய முறையில் பணியாற்றி உள்ளார். அன்னாரின் மறைவு குறித்து அவரை இழந்து விட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலேயும் என்னுடைய சார்பிலேயும் தெரிவித்துக் கொள்கிறேன். 'இயற்கை எய்தியவருக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் 2 மணித்துளிகள் எழுந்து நின்று அமைதி காக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் 2 மணித்துளிகள் எழுந்து நின்று அமைதி காத்தனர்.)

2. வினாக்கள்— விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 81, திரு. கே. முனிவெங்கடப்பன், மாண்புமிகு நிதியமைச்சர்.

81—

கிட்டம்பட்டியை கிருட்டிணகிரி தொகுதியுடன் இணைத்தல்.

*21981— திரு. கே. முனிவெங்கடப்பன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கிருட்டிணகிரி வட்டம், கிருட்டிணகிரி ஒன்றியம், கிட்டம்பட்டி (அகசிப்பல்லி ஊராட்சி) அருகில் இருக்கின்ற காவேரிப்பட்டினம் தொகுதியில் சேர்த்துள்ளதை மக்கள் விருப்பத்திற்கேற்ப கிருட்டிணகிரி தொகுதியுடன் சேர்க்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், நிதியமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. கே. முனிவெங்கடப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொன்னார்கள். இல்லை என்றே சொல்லாமல் வாரி வழங்குகின்ற வகையில் ஆட்சி நடத்துகின்ற புனிதத் தலைவி, புரட்சித் தலைவியின் ஆட்சியில் இல்லை என்று சொல்லி விட்டார்களே, சர்வ சக்தியும் படைத்து, பகைவருக்கும் அருள் புரியும் ஆதி பராசக்தியாய் புனித ஆட்சி நடத்தும் புனிதத் தலைவியின் ஆட்சியில் இல்லை என்று சொல்லி விட்டார்களே— கிட்டம் பட்டி கிராமமானது, கிருஷ்ணகிரி நகராட்சியை ஒட்டி கிருஷ்ணகிரி தொகுதியின் மையத்தில் அமைந்திருக்கிறது. காவேரிப் பட்டினம் தொகுதியிலிருந்து மிகவும் தூரமான இடத்தில் இருக்கிறது. கிருஷ்ணகிரி ஒன்றியத்திற்கு உட்பட்டு இருக்கிறது. ஆகவே மக்களின் விருப்பத்திற்கு ஏற்ப இந்த கிட்டம் பட்டி கிராமத்தினை கிருஷ்ணகிரி தொகுதியோடு இணைக்க மறுபரிசீலனை செய்ய அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.